


# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa

www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு

9597887847 / 8870884969

செவ்வாய், அக்டோபர் 12.2021 மலர்:10 இதழ்:13

# தமிழ்நாடு ஊரக உள்ளாட்சித் தேர்தல்:வாக்கு எண்ணும் பணி தீவிரம்

## 5 வது கட்டமாக நடந்த முகாம் 22.52 லட்சம் பேருக்கு கொரோனா தடுப்பூசி

## தீபாவளிக்கு 16,540 சிறப்பு பஸ்கள்:சென்னையில் 6 இடங்களில் இருந்து இயக்க ஏற்பாடு





தீபாவளி பண்டிகை அடுத்த மாதம் நவம்பர் 4 ந் தேதி கொண்டாடப்படுகிறது.தீபாவளியை முன்னிட்டு பொதுமக்கள் தங்கள் சொந்த ஊருக்கு செல்ல ஆண்டுதோறும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுவது வழக்கம். இந்த நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நிருபர்களுக்கு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அளித்த பேட்டி வருமாறு, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு போக்குவரத்து துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பஸ்கள் இயக்கம் குறித்த ஆலோசனை கூட்டம், அமைச்சர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போக்குவரத்து துறையின் உயர் அதிகாரிகள், காவல்துறை அலுவலர்கள், சென்னை மாநகராட்சி அலுவலர்கள், தாம்பரம் நகராட்சி ஆணையர், பூந்தமல்லி நகராட்சி ஆணையர், சென்னை பெருநகர வளர்ச்சி குழும கண்காணிப்பு பொறியாளர், அனைத்து போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வரும் நவம்பர் 1 ந் தேதி முதல் 3 ந் தேதி வரை தினசரி இயக்கக்கூடிய 2,100 பஸ்களுடன் 3,506 சிறப்பு பஸ்கள் என 3 நாட்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக, சென்னையில் இருந்து 9,806 பஸ்களும், பிற ஊர்களில் இருந்து இந்த 3 நாட்களுக்கு 6,734 சிறப்பு பஸ்கள் என மொத்தமாக 16 ஆயிரத்து 540 பஸ்கள் இயக்கப்படும். தீபாவளி பண்டிகை முடிந்த பின்னர், பிற ஊர்களில் இருந்து சென்னைக்கு நவம்பர் 5 ந் தேதியில் இருந்து 8 ந் தேதி வரை தினசரி இயக்கக்கூடிய 2,100 பஸ்களுடன், 4,319 சிறப்பு பஸ்களும், மற்ற முக்கிய ஊர்களில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு 5 ஆயிரம் சிறப்பு பஸ்கள் என மொத்தமாக 17 ஆயிரத்து 719 பஸ்களும் இயக்கப்படும். நவம்பர் 1 ந் தேதியில் இருந்து 3 ந் தேதி வரை சென்னையில் 6 இடங்களில் இருந்து பஸ்கள் இயக்கப்படுகிறது. மாதவரம் புதிய பஸ் நிலையத்தில் இருந்து செங்குன்றம் வழியாக பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை செல்லும் பஸ்கள் இயக்கப்படும். சென்னை கே. கே. நகர் பஸ் நிலையத்தில் இருந்து இ. சி. ஆர். வழியாக கடலூர், சிதம்பரம் செல்லும் பஸ்கள் இயக்கப்படுகிறது. தாம்பரம் அண்ணா (மெப்ஸ்) பஸ் நிலையத்தில் இருந்து திண்டிவனம், விக்கிரவாண்டி, பண்ருட்டி வழியாக கும்பகோணம், தஞ்சாவூர் செல்லும் பஸ்கள் புறப்பட்டு செல்லும். தாம்பரம் ரெயில் நிலைய பஸ் நிறுத்தத்தில் இருந்து திண்டிவனம் வழியாக திருவண்ணாமலை, போளூர், சேத்துபட்டு, வந்தவாசி, செஞ்சி செல்லும் பஸ்களும் திண்டிவனம் வழியாக பண்ருட்டி, நெய்வேலி , வடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் மற்றும் திண்டிவனம் வழியாக புதுச்சேரி , கடலூர், சிதம்பரம் செல்லும் பஸ்களும் புறப்படும். பூந்தமல்லி பஸ் நிலையத்தில் இருந்து வேலூர், ஆரணி, ஆற்காடு, திருப்பத்தூர், காஞ்சீபுரம், செய்யாறு, ஓசூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருத்தணி, திருப்பதி செல்லும் பஸ்கள் இயக்கப்படும். கோயம்பேடு எம் . ஜி. ஆர். பஸ் நிலையத்தில் இருந்து மேற்கூறப்பட்ட ஊர்களைத் தவிர மற்ற அனைத்து ஊர்களுக்கும் பெங்களூரு உள்பட பஸ்கள் விடப்படும். முன்பதிவு செய்துள்ள பஸ்கள், கோயம்பேடு எம். ஜி. ஆர். பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு பூந்தமல்லி, நசரத்பேட்டை, வெளிச் சுற்றுச்சாலை வழியாக வண்டலூர் சென்றடைந்து ஊரப்பாக்கம் தற்காலிக பேருந்து நிறுத்தத்திற்கு சென்று, தாம்பரம் மற்றும் பெருங்களத்தூரில் இருந்து பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்த பயணிகளை ஏற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர் , போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தாம்பரம் , பெருங்களத்தூர் வழியாக செல்வதை தவிர்த்து திருக்கழுகுன்றம்—செங்கல்பட்டு அல்லது ஸ்ரீபெரும்புதூர்— செங்கல்பட்டு வழியாக செல்லலாம். பயணிகளின் வசதிக்காக 24 மணி நேரமும் கட்டுப்பாட்டு அறை இயங்கும் . பஸ்களின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் இயக்கம் குறித்து புகார் தெரிவிப்பதற்கும் ஏதுவாக 9445014450, 9445014436 ஆகிய தொலைபேசி எண்களை எப்போதும் தொடர்பு கொள்ளலாம். ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 044 24749002, 1800 425 6151 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்களை பயணிகள் தொடர்பு கொள்ளலாம். பயணிகளின் நலன் கருதி கோயம்பேடு பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் செயல்படும். பஸ் நிலையங்களுக்கு வருகை தரும் பயணிகள், பஸ் மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக 20 இடங்களில் தகவல் மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் இந்த பஸ் சேவையை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளலாம். பயணத்தின்போது முக கவசம் அணிய வேண்டும். பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு எம். ஜி. ஆர். பஸ் நிலையத்தில் இருந்து மேற்கூறப்பட்ட 4 பஸ் நிலையங்களுக்கும் செல்ல ஏதுவாக மாநகர் போக்குவரத்து கழகத்தின் சார்பில் இணைப்பு பஸ்கள் 24 மணி நேரமும் இயக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழகம் முழுவதும் நடைபெற்ற 5 வது கட்ட மெகா முகாமில் 22.52 லட்சம் பேருக்கு கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. கரோனா 3 வது அலை எச்சரிக்கை இருப்பதால், தமிழகத்தில் தடுப்பூசி போடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தில் ஞாயிறுதோறும் மெகா கரோனா தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, கடந்த செப்டம்பர் 12,19,26 அக்டோபர் 3 என மொத்தம் 4 முகாம்களில் 87.57 லட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது. இந்நிலையில், தமிழகம் முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள், ரயில் நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் முக்கிய இடங்கள் என மொத்தம் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மையங்களில்5 வது கட்ட மெகா தடுப்பூசிமுகாம் நேற்று நடந்தது . சென்னையில் மட்டும் 1,600 இடங்களில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. இப்பணியில்சுகாதாரப் பணியாளர்கள் , அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் ஈடுபட்டனர். காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை நடந்தமுகாமில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆர்வமாக வந்து தடுப்பூசி போட்டுக் கொண்டனர் . அவகாசம் முடிந்தும் 2 வது தவணை தடுப்பூசி போடுக் கொள்ளாதவர்களை சுகாதாரத் துறையினர் செல்போனில் தொடர்பு கொண்டு அவர்களது தயக்கத்தை போக்கி, அவர்களுக்கு 2 வது தவணை தடுப்பூசி போடப்பட்டது . சில இடங்களில் தடுப்பூசி போடுக் கொண்டவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. சென்னை சின்னமலை புனித பிரான்சிஸ் சேவியர் தொடக்கப் பள்ளி , கிண்டி மடுவன்கரை ஆரம்பசுகாதார நிலையத்தில் நடந்த முகாம்களை முதல்வர் ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தடுப்பூசி போடுக்கொள்ள வந்த மக்கள், பணியாளர்களிடம் முதல்வர் உரையாடினார்.

தடுப்பூசி போடும் பணியை தீவிர இயக்கமாக நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் சிறப்பு கவனம் செலுத்தி கரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம்களின் இலக்கை முழுமையாக அடைய வேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்தினார். ஆய்வின்போது, அமைச்சர்பொன்முடி, சுகாதாரத் துறை செயலர் ஜெ. ராதாகிருஷ்ணன், சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் உடன் இருந்தனர். ராமநாதபுரம், திண்டுக்கல் , கரூர் மாவட்டங்களில் நடந்த முகாம்களை சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆய்வு செய்தார். அந்தந்த மாவட்டங்களில் முகாம்களை அமைச்சர்கள், எம். பி. க்கள், எம்எல்ஏக்கள் ஆய்வு செய்தனர் . தமிழகம் முழுவதும் நடைபெற்ற 5 ம் கட்ட மெகா கரோனா தடுப்பூசி முகாமில் 18 வயதுக்கு மேற்பட்ட 22.52 லட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. சென்னையில் 1.63 லட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது.

## உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணிக்கை:முறையாக நடத்த தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கும்-ஐகோர்ட்டு



தமிழகத்தில் காஞ்சீபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, நெல்லை , தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் கடந்த 6, 9 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக ஊரக உள்ளாட்சி தேர்தல் நடந்தது . இந்நிலையில் இன்று காலை 8 மணி முதல் வாக்கு எண்ணும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், வாக்கு எண்ணிக்கையில் முறைகேடுகள் நடக்க வாய்ப்புள்ளதாகக் கூறி, வாக்கு எண்ணிக்கை முழுவதையும் வீடியோ பதிவு செய்ய உத்தரவிடக் கோரி, திரிசூலம் பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கும், வார்டு உறுப்பினர் பதவிக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர் பதவிக்கும் போட்டியிட்ட சரஸ்வதி, சத்தியநாராயணன், முத்துக்கனி ஆகியோர் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கு நீதிபதிகள் மகாதேவன் மற்றும் ஆதிகேசவலு அடங்கிய அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறுகையில், வாக்கு எண்ணிக்கை ஏற்கெனவே தொடங்கி விட்டது. உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணிக்கையை முறையாக நடத்த தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறோம். வாக்கு எண்ணிக்கையை வீடியோ பதிவு செய்யக் கோரிய வழக்குகளுக்கு மாநில தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும்× என்று அவர்கள் உத்தரவிட்டனர்.




விளம்பர தொடர்புக்கு

9597887847

8870884969

GoLAAH TRAVELS
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறை — திருச்சி இடையே முன்பதிவில்லா சிறப்பு விரைவு ரெயில்

## வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம்



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம் கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் கே. பணீந்திரரெட்டி தலைமையில் நடைபெற்றது . கூட்டத்தின்போது மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணாசிங் ஆகியோர் உடனிருந்தனர். பின்னர் வருவாய் நிர்வாக ஆணையர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது. தமிழகத்தில் தென்மேற்கு பருவமழையால் கூடுதலான மழைநீர் கிடைத்துள்ளது . அதையொட்டி வடகிழக்கு பருவமழையால் இயல்பான மழைநீர் கிடைக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது இக்காலகட்டத்தில் புயல், வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளை எதிர்கொள்ள கடலோர மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டி உள்ளது . அதனடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் மூத்த இந்திய ஆட்சி பணி அலுவலர்கள் மேற்பார்வை அலுவலர்களாக நியமிக்கப்பட்டு, அவர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கு சென்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டு வருகின்றார்கள் . மயிலாடுதுறை மாவட்டத்தை பொறுத்தவரை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது . கால்வாய்கள், மழைநீர் கால்வாய்கள் துவாருதல் 80 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது . மீதம் உள்ள தூர்வாரும் பணிகள் ஒருவார காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும். மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள புயல் பாதுகாப்பு மையங்களும், 4 பல்நோக்கு பேரிடர் மையங்களிலும் ஆய்வு செய்து அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளனவா என உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும் சுமார் 45 தாழ்வான பகுதிகள், மிகவும் தாழ்வான பகுதிகள் என கண்டறியப்பட்டு, அப்பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்ல தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் ஆபத்தான நிலையில் உள்ள பழமையான மரங்கள், கட்டிடங்கள் இருந்தால் அது குறித்த தகவல்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் கட்டுப்பாட்டு மையத்திற்கு தெரிவிக்கவும். அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இம்மாவட்டத்தில் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் 33 அலுவலர்கள் அடங்கிய 3 மண்டல குழுக்களும், 22 அலுவலர்கள் அடங்கிய 4 கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 3784 முதல்நிலை மீட்பாளர்கள் தயார்நிலையில் உள்ளனர். தாழ்வான பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேவையான மணல் மூட்டைகள், பாலீதின் பைகள், சவுக்கு குச்சிகள் ஆகிய இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மையத்தில் 1077 04364 222588 என்ற தொலைபேசி எண்கள் இயங்கி வருகிறது. இக்கட்டுப்பாட்டு மையத்தில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர் என கூடுதல் தலைமைச் செயலர் வருவாய் நிர்வாக ஆணையர் கே. பணீந்திரரெட்டி தெரிவித்துள்ளார்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் இடைத்தேர்தல்

## மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம் 30 வது வார்டு ஒன்றிய குழு உறுப்பினர் பதவிக்கு இடைத்தேர்தலில் ஊராட்சி கிராம மக்கள் வரிசையில் நின்று ஆர்வத்தோடு வாக்களித்தனர் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம் காட்டுச்சேரி, சந்திரபாடி, திருக்களாச்சேரி உள்ளிட்ட ஊராட்சிகள் உள்ளடக்கிய 30 வது வார்டு ஒன்றிய குழு உறுப்பினராக இருந்த சுந்தர் காலமானார். அந்த பதவிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் அதிமுக சார்பில் சுபரிநாதன், திமுக சார்பில் செல்வம், நாம் தமிழர் கட்சி சார்பில் இளையநகுலன் உள்பட 5 பேர் போட்டியிடுகின்றனர். இந்த வார்டில் ஆண் வாக்காளர்கள் 2517 பேரும்,பெண் வாக்காளர்கள் 2591 பேர் உள்ளனர். மொத்தம் 9 வாக்குச் சாவடி மையங்களில் மக்கள் அமைதியாக தங்களது வாக்கினை பதிவு செய்தனர். சந்திரபாடி வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பார்வையாளர் இரா. நந்தகோபால், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா ஆகியோர் பார்வையிட்டனர். இதேபோல் குத்தாலம் ஒன்றியத்துக்கு உட்பட்ட தத்தங்குடி, கழனிவாசல், பொரும்பூர் உள்ளடக்கிய 15 வது வார்டில் ஒன்றியக்குழு உறுப்பினர் பதவிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 4471 வாக்காளர்கள் உள்ள இந்த வார்டில் திமுக சார்பில் ரமேஷ் (எ) ராக்கெட், அதிமுக சார்பில் மணிகண்டன் உள்ளிட்ட 5 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். காலை முதல் மக்கள் கொரோனா விதிமுறைகளை பின்பற்றி ஒவ்வொரு வாக்குச் சாவடிகளும் பொதுமக்கள் சமூக இடைவெளியுடன் கிருமி நாசினி வழங்கி, முககவசம் அணிந்து, வாக்களிக்களித்தனர். அவர்களுக்கு அரசு சார்பில் கையுறைகள் வழங்கப்பட்து. வாக்காளர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது ஆர்வமாக வந்து தங்களது வாக்குகளை பதிவு செய்தனர்.

## தில்லையாடி வள்ளியம்மை மணிமண்டபம் சீரமைப்பது குறித்து மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு..!



தென் ஆப்பிரிக்க விடுதலைப் போரில் மிக முக்கிய பங்காற்றியவர் தில்லையாடி வள்ளியம்மை. சிறுமி தில்லையாடி வள்ளியம்மை தான் எனக்கு முதன்முதலில் சுதந்திர வேட்கையை ஊட்டியவர் என்று மகாத்மா காந்தி பெருமிதத்துடன் கூறினார். பெருமை படைத்த தில்லையாடி வள்ளியம்மையின் ஊரை பார்ப்பதற்காக தமிழகம் வந்திருந்த மகாத்மா காந்தியடிகள் 1915 ஆம் ஆண்டு அவர் தில்லையாடியில் அமர்ந்திருந்த இடத்தில் ஒரு நினைவு ஸ்தூபி கட்டப்பட்டுள்ளது. அதற்கு அருகே தில்லையாடி வள்ளியம்மைக்கு மணிமண்டபம் மார்பளவு சிலை மகாத்மா காந்தி எழுதிய கடிதங்கள் ஆகியவைகள் இடம் பெற்றுள்ளது. இந்த கட்டிடம் தற்போது பழமை காரணமாக சீரமைக்க வேண்டிய நிலைமையில் உள்ளது. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதா ஞாயிற்றுக்கிழமை தில்லையாடி வள்ளியம்மை மண்டபத்தில் ஆய்வு மேற்கொண்டார். முன்னதாக வள்ளியம்மையின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட ஆட்சியர் கூறுகையில் விரைவில் புதுப்பொலிவுடன் தில்லையாடி வள்ளியம்மையின் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா தெரிவித்தார். இவ்வாய்வின் போது செம்பனார் கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் மஞ்சுளா, தரங்கம்பாடி வட்டாட்சியர் ஹரிதரன், தில்லையாடி ஊராட்சி மன்றத்தலைவர் ரங்கராஜன், ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயந்தி கார்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## வன உயிரின பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவிலில் தமிழ்நாடு வனத்துறை சார்பில் வன உயிரின வாரம் விழிப்புணர்வுப் பேரணி வியாழக்கிழமை நடைபெற்றது. நாகை வன உயிரின காப்பாளர் யோகேஷ் குமார் மீனா அறிவுறுத்தலின்படி சீர்காழி வனச்சரக அலுவலர் ஜோசப் டேனியல் தலைமையில் செம்பனார்கோவில் கலைமகள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் இருந்து 200 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் வன உயிரினம் பாதுகாப்பு அவசியம் குறித்து பதாகைகளை கையில் ஏந்தியபடி கீழமுக்கூட்டு கடைவீதி வரை பேரணியாக சென்றடைந்தனர். இப்பேரணியில் கலைமகள் கல்வி நிறுவனங்களின் இயக்குனர் என்.எஸ்.குடியரசு, வனச்சரக பணியாளர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டன.

விளம்பர தொடர்புக்கு
9597887847

### மயிலாடுதுறை அருகே 13 வயது சிறுமி சந்தேக மரணம்

# குற்றவாளிகளை கைது செய்ய கோரி சாலைமறியல்



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அருகே வில்லியநல்லூர் தெற்குதெருவைச் சேர்ந்த ஆனந்தன் என்பவரின் மகள் 13 வயதான ஷோபனா.9 ஆம் வகுப்பு படித்து வரும் சிறுமி ஷோபனா இரவு 9 மணி அளவில் அதே பகுதியில் வசிக்கும் மாமா பாலசுப்ரமணியன் வீட்டிற்கு சென்று விட்டு வருவதாக சென்றவர், அதன் பிறகு மீண்டும் வீடு திரும்பவில்லை. இதனால் சிறுமியை பல்வேறு பகுதியில் தேடிய பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் அவர் எங்கு கிடைக்காததை அடுத்து குத்தாலம் காவல் நிலையத்தில் சிறுமியை புகார் அளித்தனர். இந்நிலையில் சிறுமியை தொடர்ந்து தேடி உறவினர்கள் மாமா பாலசுப்ரமணியன் வீட்டின் பின்புறம் உள்ள தண்ணீர் இல்லாத வாய்க்காலில் சிறுமி சந்தேகமான முறையில் இறந்து கிடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதனையடுத்து சிறுமியின் உறவினர்கள் குத்தாலம் காவல்துறைக்கு தகவல் அளித்தனர். தகவலை அடுத்து அங்கு விரைந்த குத்தாலம் காவல்துறையினர். சிறுமியின் உடல் அருகில் சென்று பார்த்ததில் சிறுமி அணிந்திருந்த லெக்கின்ஸ் பேண்ட் கிழிந்து ரத்தக்கறையுடன் காணப்பட்டுள்ளது. இருந்ததால் சிறுமி பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணையை தொடங்கி உள்ள குத்தாலம் காவல் துறையினர் சிறுமியின் உடலை வாய்க்கால் இருந்து மீட்டு உடல்கூறு ஆய்வுக்காக திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இச்சம்பவம் குறித்து மயிலாடுதுறை காவல் துணை கண்காணிப்பாளர் வசந்தராஜ் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை மேற்கொண்டார். இது தொடர்பாக காவல்துறையினர் சில இளைஞர்களை பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் உடல்கூறு ஆய்வு செய்யப்பட்ட சிறுமியின் உடல் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்காக திருவாரூர் மருத்துவமனையில் இருந்து அவரது வீட்டிற்கு அமரர் ஊர்தியில் கொண்டு வரப்பட்டது. இதனை அறிந்த கிராம மக்கள் குத்தாலம் அஞ்சாறு வார்த்தலை பகுதியில் அமரர் ஊர்தியை வழிமறித்து கொட்டும் மழையில் சிறுமியின் இறப்புக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பூம்புகார் கல்லணை சாலையில் சுமார் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் செல்வம் சம்பவ இடத்திற்கு சென்று 2 நாட்களில் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை கைது செய்வதாக உறுதியளித்தார். அதன்பேரில் கிராம மக்கள் சாலைமறியலை கைவிட்டு உடலை எடுத்து சென்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

### பல்வேறு கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட

# ஹெல்மெட் திருடன் மயிலாடுதுறையில் கைது




தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பூட்டிய கடைகளை உடைத்து கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட ஹெல்மெட் கொள்ளையன் மயிலாடுதுறையில் கைது. மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த மாதம் அடுத்தடுத்து பூட்டிய கடைகளை உடைத்து கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றன. இதையடுத்து, மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணாசிங் உத்தரவின்பேரில், துணை காவல் கண்காணிப்பாளர் வசந்தராஜ் கண்காணிப்பில் காவல் ஆய்வாளர் செல்வம் தலைமையில் உட்கோட்ட அளவில் தனிப்படை அமைக்கப்பட்டு, கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட மர்ம நபரை தேடி வந்தனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் 120 சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்ததில் ஹெல்மெட் அணிந்து குற்றச்சம்பவத்தில் ஈடுபட்ட நபர் கும்பகோணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டு பின்னர் தலைமறைவானது தெரியவந்தது. இந்நிலையில், மயிலாடுதுறையில் ஒரு கடையின் பூட்டை உடைக்க முயன்ற நபரை அப்பகுதியில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போலீசார் மடக்கிப் பிடித்து அவரை அடையாளம் கண்டறிந்து கைது செய்தனர். விசாரணையில் அந்த நபர் புதுக்கோட்டை மாவட்டம் மீமிசல் பகுதியைச் சேர்ந்த காத்தமுத்து மகன் லட்சுமணன்(42) என்பதும், அவர் கடந்த மாதம் மயிலாடுதுறையில் நடைபெற்ற கடை உடைப்புச் சம்பவம், கடந்த வருடம் நடைபெற்ற மற்றொரு கடை உடைப்புச் சம்பவம் உள்ளிட்ட பல்வேறு கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதும், அவர் பொள்ளாச்சி, திண்டுக்கல், திருப்பூர், புதுக்கோட்டை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் 35 க்கும் மேற்பட்ட வழக்குகள் இருப்பதும் தெரியவந்தது. இதையடுத்து, லட்சுமணனைக் கைது செய்த மயிலாடுதுறை போலீசார் அவரிடமிருந்து திருட்டுக்கு பயன்படுத்திய வாகனம், ஆயுதங்கள், ரொக்கப்பணம் ஆகியவற்றை பறிமுதல் செய்து, அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# மயிலாடுதுறையில் கவிஞர் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் 195 வது பிறந்தநாள் விழா



கி.பி.1826 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் தேதி திருச்சி அருகே குளத்தூரில் கவிஞர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை பிறந்தார். பின்பு மயிலாடுதுறையில் கோர்ட் முன்சீப்பாக (நீதிபதியாக) பணியாற்றிய அவர், மயிலாடுதுறை நகராட்சியில் முதல் நகர்மன்ற தலைவராக பதவி வகித்தார். தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக பல்வேறு தமிழ், இலக்கிய நூல்களை எழுதியவர். வெளிநாடுகளில் பிரபலமாகி வந்த நாவல் கதைகளைப் போன்று தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதினார். இதனால் தமிழ் முதல் புதினத்தை இயற்றியவர் என்ற பெயர் பெற்றார். அவரது 195 வது பிறந்ததினம் இன்று மயிலாடுதுறையில் அனைத்துத் தமிழ் அமைப்புகள் சார்பில் கொண்டாடப்பட்டது. தமிழுக்கு தொண்டாற்றிய வேதநாயகம் பிள்ளையின் திருவுருவ சிலை கல்லறைத் தோட்டத்தில் அமைந்துள்ளது. அவரது உருவ சிலைக்கு தமிழ் அறிஞர்கள், மயிலாடுதுறை எம்.எல்.ஏ.ராஜகுமார் மற்றும் பொதுமக்கள் மலர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். மயிலாடுதுறை நீதிமன்றத்தில் வேதநாயகம் பிள்ளையின் திருவுருவ சிலையை நிறுவ வேண்டும். வேதநாயகம் பிள்ளையின் நினைவாக மணிமண்டபம் கட்ட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், அவரது புதினத்தை தமிழக பாடதிட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று மயிலாடுதுறை தமிழ் சங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு தமிழ் அமைப்பினர் கோரிக்கை விடுத்தனர்.

# வெளிநாடுகளுக்கு செல்லும் மயிலாடுதுறை கொலு பொம்மைகள்



மயிலாடுதுறையில் நான்கு தலைமுறைகளாக பாரம்பரிய முறையில் கொலு பொம்மைகளை உருவாக்கி வரும் கலைக்குடும்பம், தமது குறுந்தொழிலை விரிவுபடுத்தி, தற்போது உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கு கொலு பொம்மைகளை அனுப்பி வருகின்றது.மயிலாடுதுறையில் மூன்று தலைமுறையாக குடிசைதொழிலாக செய்யப்பட்டு வந்த கொலு பொம்மைகள் உற்பத்தி தொழிலை நான்காம் தலைமுறை பட்டதாரி இளைஞரான ஆனந்தகுமார் விரிவுபடுத்தி அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளார். இவர், தான் தயாரிக்கும் கொலு பொம்மைகள், மண் சிற்பங்கள் ஆகியன தமிழகம் மட்டுமின்றி கேரளா, பெங்களூரு, டெல்லி உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா, துபாய் ஆகிய வெளிநாடுகளுக்கும் அனுப்பி வருகிறார். நவராத்திரியை ஒட்டி இந்தாண்டு இவர் தயாரித்துள்ள விவசாய செட் பொம்மைகள் அமோகமாக விற்பனை ஆகி வருகின்றன. மேலும், கிருஷ்ண பெருமானின் தசாவதாரம் பொம்மைகள், கடவுள், தேசத் தலைவர்கள், விலங்கு, பறவைகளின் பொம்மைகள், உடற்பயிற்சியின் அவசியத்தை பெண்களுக்கு உணர்த்தும் பொம்மைகள் நன்கு விற்பனை ஆகின்றன. அந்த வகையில் மாவு அரைத்தல், துணி துவைத்தல், அம்மி அரைத்தல், உலக்கை இடித்தல் போன்ற பொம்மைகளுக்கும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளன. மண் பானையில் தொங்கும் மின்விளக்கு போன்ற புதுமையான கொலு பொம்மைகளில் புதுவரவுகள் அமோக விற்பனையாகி வருகிறது.கடந்த 20 மாதங்களாக கொரோனா ஊரடங்கு காரணமாக விற்பனை ஆகாமல் இருந்த கொலு பொம்மைகள், தற்போது அரசு தளர்வுகளை அறிவித்ததால் விற்பனை சூடு பிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# திட்டையில் புதிய மின்மாற்றி பயன்பாட்டிற்கு தொடக்கம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த திட்டை கிராமத்தில் சுமார் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக குறைந்த மின் அழுத்தத்தால் பொதுமக்களும் விவசாயிகளும் அவதிக்கு உள்ளானார்கள். இதனால் அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று ரூபாய் 7.25 லட்சம் மதிப்பீட்டில் புதிய மின் மாற்றி அமைக்கப்பட்டு பணிகள் முடிந்த நிலையில் மக்கள் பயன்பாட்டுக்கு சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் தொடங்கி வைக்கும் விழா திட்டை திமுக ஊராட்சி மன்ற தலைவர் பெரியசாமி ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் சீர்காழி மேற்கு ஒன்றிய செயலாளர் பிரபாகரன் சீர்காழி தெற்கு உதவி செயற்பொறியாளர் விஜயபாரதி சீர்காழி வடக்கு உதவி செயற்பொறியாளர் விசுவநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு




அகர முதல

Aagaramuthalaa

மின்னிதழ்

www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், அக்டோபர் 12.2021 | கடலூர் | மலர்:10 இதழ்:13

# கடலூர் மாவட்ட செய்திகள்

## 250 ஊராட்சிகளில் 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி கலெக்டர் தகவல்

## முந்திரி தொழிலாளி அடித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில் கடலூர் எம்.பி.ரமேஷ் கோர்ட்டில் சரண்



கொலை வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் சரணடைந்த எம்.பி. டி.ஆர்.வி.எஸ்.ரமேஷை இரு நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடலூர் மக்களவைத் தொகுதி எம்.பி.யாக இருப்பவர் டி.ஆர்.வி.எஸ்.ரமேஷ், இவருக்குச் சொந்தமான முந்திரி தொழிற்சாலை, பண்ருட்டி அருகே பனிக்கன்குப்பத்தில் உள்ளது. இந்த தொழிற்சாலையில் மேலமாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தராசு(55) என்பவர் வேலை பார்த்து வந்தார். கடந்த மாதம் 19 ம் தேதி கோவிந்தராசு மர்மமான முறையில் உயிரிழந்தார்.அவரது இறப்புக்கு கடலூர் எம்.பி. ரமேஷ்தான் காரணம் எனக் கூறி, கோவிந்தராசுவின் உறவினர்களும், பாமகவினரும் சாலை மறியலில் ஈடுபட்டனர். இது தொடர்பாக, காடாம்புலியூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில், இந்த வழக்கு சிபிசிஐடி பிரிவுக்கு மாற்றப்பட்டது . இதையடுத்து, விசாரணையைத் தொடங்கிய சிபிசிஐடி போலீஸார், திமுக எம்.பி. ரமேஷ் மற்றும் அவரது உதவியாளர் நடராஜன் உள்ளிட்ட 6 பேர் மீது கொலை வழக்குப் பதிவு செய்துள்ளனர். அவர்களில் ரமேஷ் தவிர 5 பேரை சிபிசிஐடி போலீஸார் கைது செய்தனர். இதனால், எம்.பி. ரமேஷ் எந்நேரமும் கைது செய்யப்படலாம் எனக் கூறப்பட்டது . இது தொடர்பாக, சென்னையில் உள்ள எம்.பி., ரமேஷிடம் சிபிசிஐடி பிரிவின் ஒரு குழுவினர் விசாரணை நடத்தியதாக நேற்று தகவல்கள் வெளியாகின. இந்நிலையில்,அக்11, அவர் பண்ருட்டி சார்பு நீதிமன்ற நீதிமன்ற நடுவர் கற்பகவள்ளி முன்பு சரணடைந்தார் . அவரை அக்டோபர் 13 மற்றும் 14 ஆகிய இரு நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதித்துறை நடுவர் கற்பகவள்ளி உத்தரவிட்டார். இதையடுத்து அவர் கரோனா பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். பரிசோதனைக்குப் பின் கடலூர் கிளைச்சிறையில் அடைக்கப்படுவார். கரோனா பரிசோதனையின் முடிவின்படி கடலூர் மத்திய சிறையில் அடைப்பது குறித்து சிபிசிஐடி போலீஸார் முடிவு செய்வர். இதனிடையே, எம். பி. ரமேஷ் வெளியிட்ட அறிக்கையில், என்னுடைய முந்திரித் தொழிற்சாலையில் பணிபுரிந்த திரு கோவிந்தராஜ் என்பவரது மரணம் தொடர்பாக சிபிசிஐடி என் மீது பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கையினை அடிப்படையாக வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது சில அரசியல் கட்சிகள் தங்களுக்கே உரித்தான அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் தவறான பிரச்சாரத்தை மேற்கொண்டிருப்பது என் மனதிற்கு நெருடலாகவும் இந்த இயக்கத்தின் தொண்டர்களில் ஒருவனாக இருக்கும் எனக்கு மிகுந்த வேதனையும் அளிக்கிறது. ஆகவே நான் உயிரினும் போற்றும் என் தலைவர் அவர்களின் நல்லாட்சியின் மீது வீண்பழி வீசுபவர்களுக்கு மேலும் இடம் கொடுத்திட வேண்டாம் எனக் கருதி சிபிசிஐடி பதிவு செய்துள்ள வழக்கில் நான் நீதிமன்றத்தில் சரணடைகிறேன். என் மீது சுமத்தப்பட்டுள்ள புகார் ஆதாரமற்றது என்பதை சட்டத்தின் முன்பு உரிய ஆதாரங்களுடன் நிரூபித்து வெளியே வருவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## கடலூர் அரசு ஆஸ்பத்திரியில் ரூ.1கோடியில் ஆக்சிஜன் உற்பத்தி ஆலையை மாவட்ட ஆட்சியர் திறந்து வைத்தார்




கொரோனா நோய் பரவலை கட்டுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. இதையடுத்து 2 மற்றும் 3 வது அலையை எதிர்கொள்ளும் வகையில் கொரோனா நோயாளிகளின் உயிரை காக்க பிரதமர் நரேந்திரமோடி தனது பிரதமர் நிவாரண நிதி மூலம் நாடு முழுவதும் ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகள் நிறுவப்பட்டன. அதன்படி கடலூர் மாவட்ட அரசு தலைமை ஆஸ்பத்திரியில் 1000 லிட்டர் திறன் கொண்ட ரூ.1 கோடி மதிப்பில் ஆக்சிஜன் உற்பத்தி ஆலை இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்தின் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலைத்துறையின் மூலம் நிறுவப்பட்டது. இந்த ஆக்சிஜன் உற்பத்தி ஆலை 1 நிமிடத்தில் 1000 லிட்டர் ஆக்சிஜனை காற்றில் இருந்து உற்பத்தி செய்யும் திறன் பெற்றது. இதை கடலூர் மாவட்ட மக்களுக்கு பிரதமர் நரேந்திரமோடி அர்ப்பணித்தார். இதையடுத்து கடலூர் அரசு ஆஸ்பத்திரியில் நடந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு புதிய ஆக்சிஜன் உற்பத்தி ஆலையை திறந்து, இயக்கி வைத்தார். இதில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் அய்யப்பன், ஆஸ்பத்திரி கண்காணிப்பாளர் சாய்லீலா, தேசிய சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் காரல், டாக்டர் பரிமேலழகர், தி. மு. க. நகர செயலாளர் ராஜா, கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி. பெருமாள், ரவிச்சந்திரன் மற்றும் ஆஸ்பத்திரி டாக்டர்கள், செவிலியர்கள், செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகள் கலந்து கொண்டனர். கடலூர் அரசு ஆஸ்பத்திரியில் ஆக்சிஜன் இணைப்புடன் கூடிய 224 படுக்கைகளும், 350 ஆக்சிஜன் குழாய் இணைப்புகளும் உள்ளது. 6 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ மருத்துவ ஆக்சிஜன் நிலையம் மூலம் ஆக்சிஜன் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது புதிதாக திறக்கப்பட்ட 1000 லிட்டர் ஆக்சிஜன் ஆலை மூலம் ஒரே நேரத்தில் 64 செயற்கை சுவாச கருவிகளுக்கு நிமிடத்திற்கு 15 லிட்டர் என்ற அளவில் ஆக்சிஜன் வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது பற்றி மாவட்ட கலெக்டர் பாலசுப்பிரமணியம் கூறுகையில், தற்போது திறக்கப்பட்ட ஆக்சிஜன் உற்பத்தி ஆலையில் இருந்து, ஒரு நிமிடத்திற்கு 1000 லிட்டர் ஆக்சிஜன் உற்பத்தி செய்ய முடியும். இதன் மூலம் கூடுதலாக 200 நோயாளிகளுக்கு ஆக்சிஜன் வழங்க முடியும். இதனால் எப்போதும் ஆக்சிஜன் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது தவிர சிதம்பரம், விருத்தாசலம், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி உள்ளிட்ட 6 அரசு ஆஸ்பத்திரிகளில் ஆக்சிஜன் உற்பத்தி ஆலை நிறுவப்பட உள்ளது என்றார்.

## கடலூர்:மூன்றாம் பாலினத்தவருக்கு புதிய மின்னணு குடும்ப அட்டை



கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் மூன்றாம் பாலினத்தவர்க்கு புதிய மின்னணு குடும்ப அட்டை விண்ணப்பம் பெறும் சிறப்பு முகாம் நடைபெற்றது. வருவாய் வட்டாட்சியர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில், வட்ட வழங்கல் அலுவலர் பூங்குழலி, இளநிலை வருவாய் ஆய்வாளர் மணிகண்டன், தனி வருவாய் ஆய்வாளர் செந்தமிழ்வளவன் மற்றும் கிராம உதவியாளர் அன்வர் பாஷா லட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

## கடலூர் டாக்ரோஸ் நிறுவன அன்னதான திட்டத்தை அமைச்சர் எம்.ஆர்.கேபன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்





கடலூர் முதுநகரில் தனியார் திருமண மண்டபத்தில் தனியார் தொழிற்சாலை சார்பில் மக்களுக்கு அன்னதான திட்ட துவக்கவிழாவில் கலந்து கொண்ட வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம் குத்துவிளக்கு ஏற்றி திட்டதினை துவக்கி வைத்தார். பின்னர் பேசிய அவர் , கடலூர் சிப்காட் பகுதிகளில் பல இரசாயன தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது. இதில் பல தொழிற்சாலைகள் அதிக லாபம் ஈட்டி வருகின்றனர் ஆனால் தொழிற்சாலை அமைந்துள்ள சிப்காட் பகுதி மற்றும் சுற்றுவட்டரா கிராம மக்களுக்கு தேவைப்படும் அடிப்படை தேவைகளை கூட செய்ய மறுக்கிறது. இந்த நிலையில் தனியார் தொழிற்சாலை நிர்வாகம் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு நாள் தோறும் அன்னதனாமாக உணவு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தேன். அதன்படி இந்த தொழிற்சாலை தற்பொழுது 2 வருடத்திற்கு தனியார் மண்டபத்தில் மதியம் வேலை உணவு வழங்க ஏற்பாடு செய்துள்ளது. எனது கோரிக்கையினை ஏற்று இந்த அன்னதான திட்டத்தினை தொடங்கியதற்கு நன்றி. மேலும் கடந்த அதிமுக ஆட்சியின் போது கொரோனா காலத்தில் ஏழை எளிய மக்கள் வேலை இழந்து வருவாய் இல்லாமல் கடுமையான அவதிப்பட்டனர். அந்த வேலையில் கடலூர் சிப்காட் பகுதியில் உள்ள லாபம் ஈட்டுகின்ற பல தொழிற்சாலைகள் மக்களுக்கு உதவ முன் வரவில்லை, பெயரளவு கூட மக்களுக்கு எதுவும் செய்யவில்லை இது எனக்கு மன வருத்தத்தை அளித்தது அதுமட்டுமின்றி இதற்கு எனது கடுமையான கண்டனத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.இனி வரும் காலங்களில் சிப்காட் பகுதியில் உள்ள தொழிற்சாலை நிர்வாகம் சுற்றியுள்ள மக்களுக்கு சிஎஸ்ஆர் நிதி மூலம் ஏழை எளிய மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும், மேலும் தங்களது தொழிற்சாலைகளை சுற்றியுள்ள கிராமங்களை தத்தெடுக்க வேண்டும் எனவும் கேட்டு கொண்டார். மேலும் கொரோனா தொற்று பரவலானது குறைந்துள்ளது என்றாலும் மக்கள் முகக்கவசம் அணிவதையும் சமூக இடைவெளியையும் பின்பற்ற வேண்டும், மேலும் தடுப்பூசி செலுத்தி கொள்ளாத பொதுமக்கள் விரைந்து தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வந்து செலுத்திக்கொள்ள வேண்டும். தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் மெகா தடுப்பூசி முகாம்களை பயன்படுத்தி கொள்ள வேண்டும். இதுமட்டுமின்றி அனைத்து ஊர்களில் உள்ள கட்சி நிர்வாகிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள் என அனைவரும் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் தடுப்பூசி செலுத்த வேண்டியதின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி அனைவரையும் தடுப்பூசி செலுத்துவதனை உறுதி செய்தல் வேண்டும் என கேட்டுக்கொண்டார். பின்னர் வந்திருந்த பொதுமக்களுக்கு உணவு பரிமாறி அன்னதான திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

## சிதம்பரம் அருகே ரூ.19 லட்சம் மதிப்பிலான புகையிலை பொருட்கள் பறிமுதல்



கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே கொத்தட்டை மெயின் ரோட்டில் உள்ள வணிக வளாகத்தில் ஒரு குடோனில் அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, பான்மசாலா போன்ற புகையிலை பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டு, கடைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்பட்டு வருவதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சக்தி கணேசனுக்கு நள்ளிரவு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சக்தி கணேசன் தலைமையில் சிதம்பரம் துணை போலீஸ் சூப்பிரண்டு ரமேஷ்ராஜ், புதுச்சத்திரம் இன்ஸ்பெக்டர் வினதா, பரங்கிப்பேட்டை இன்ஸ்பெக்டர் தேவி உள்ளிட்ட போலீசார் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கொத்தட்டை மெயின் ரோட்டில் உள்ள குடோன் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து அதிரடி சோதனை நடத்தினர். அப்போது 30 டன் எடை கொண்ட ஹான்ஸ், குட்கா, பான்மசாலா உள்ளிட்ட புகையிலை பொருட்கள் மூட்டை, மூட்டைகளாக விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மதிப்பு 19 லட்சத்து 25 ஆயிரத்து 298 ரூபாய் ஆகும். இதையடுத்து போலீசார் அங்கு வைக்கப்பட்டிருந்த புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து, அக்கம் பக்கத்தினரிடம் விசாரணை நடத்தினர். விசாரணையில், கொத்தட்டை அங்காளம்மன் கோவில் தெருவை சேர்ந்த பழனி மகன் இளவரசன் என்கிற இளங்கோவன் வயது 44) என்பவர் வெளியூர்களில் இருந்து புகையிலை பொருட்களை கடத்தி வந்து குடோனில் பதுக்கி வைத்து சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், கடலூர், விருத்தாசலம், புவனகிரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கடைகளுக்கு அனுப்பி விற்பனை செய்தது தெரிய வந்தது. அதைத்தொடர்ந்து மொத்த வியாபாரியான இளங்கோவனை, போலீசார் கைது செய்தனர். மேலும் அவரிடம் புகையிலை பொருட்கள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டது எனவும், இந்த விவகாரத்தில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா? எனவும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். குடோனில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூ.19 லட்சம் மதிப்புள்ள புகையிலை பொருட்களை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தலைமையிலான போலீசார் பறிமுதல் செய்த சம்பவம் சிதம்பரம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்ட குடோன் புதுச்சத்திரம் போலீஸ் நிலையம் அருகே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிதம்பரம் மருத்துவமனையில் மருத்துவர் இல்லாததால் தாய் உயிரிழந்துவிட்டதாக மகன் புகார்..



சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததால் உரிய சிகிச்சை பெற முடியாமல் தாய் உயிரிழந்துவிட்டதாக இளைஞர் பரபரப்பு புகார் கூறியுள்ளார். கடலூர் மாவட்டம் சிதம்பரம் பகுதியை சேர்ந்தவர் கோதண்டராமன், இவரது மனைவி செந்தாமரைச்செல்வி. இவர்கள் இருவரும் கொரோனா பாதிப்பால் பாதிக்கப்பட்டு சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் சிகிச்சை பலனின்றி கடந்த 1ஆம் தேதி கோதண்டராமன் இறந்துவிட்டதாகவும் அதன்பிறகு செந்தாமரைச்செல்வி தொடர்ந்து அங்கு சிகிச்சையில் இருந்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது . இந்நிலையில் நள்ளிரவு 1.45 மணியளவில் அவருக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டதாகவும் , மூச்சு நின்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. அவரது மகன் சீனிவாஸ் மருத்துவர்களை அழைத்திருக்கிறார். ஆனால் அங்கு மருத்துவர் இல்லாத போது அவரது சகோதரி ஸ்ரீதேவி மூலமாக அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.அவர்கள் இருவரும் தாயை காப்பாற்ற முயற்சித்ததாகவும் ஆனால் அங்கு செவிலியர்களோ மருத்துவர்களோ இல்லை என்று சீனிவாஸ் தரப்பில் வீடியோ பதிவுசெய்யப்பட்டு வெளியிடப்பட்டது. பிறகு நள்ளிரவு 2 மணிக்கு பிறகு வேறொரு மருத்துவர் வந்து சோதித்ததாகவும், அதற்குள் அவர் இறந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. இதுசம்மந்தமாக அந்த சமயத்தில் அவர் ஒரு வீடியோ பதிவு செய்து வெளியிட்டுள்ளார். இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது. இதுதொடர்பாக கடலூர் மாவட்ட ஆட்சியரிடம் கேட்டப்போது இந்த வீடியோ தொடர்பாகவும், என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை நடத்த குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் தான் உண்மை வெளிவரும். அதன்படி யார் தவறு செய்திருந்தாலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கடலூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். ஆனால் இதுதொடர்பாக எந்தவிதமாக புகாரும் காவல்துறையில் குடும்பத்தினர் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கடலூர்: ஒரு மாத காலமாக நெல் மூட்டைகள் தேக்கம்
## மழையில் நனைந்து வீணாகும் நெல்; விவசாயிகள் வேதனை



கடலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறுவை சாகுபடி செய்த நெல்லை கொள்முதல் செய்ய நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. அதன்படி கடந்த ஆண்டு மாவட்டம் முழுவதும் 114 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதன்படி 2020/2021 ம் ஆண்டு பருவத்தில் 2 லட்சத்து 66 ஆயிரத்து 5178 மெட்ரிக்டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அதில் ரூ.1 லட்சத்து 17 ஆயிரம் மெட்ரிக்டன் நெல் அரிசி ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதையடுத்து கடந்த மாதம் 30 ந்தேதியுடன் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டன. இந்நிலையில் கரீப் பருவம் 2021 2022பருவத்திற்கு புதிதாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்து வந்தனர். அதன்படி தானூர், சம்பாரெட்டிப்பாளையம், ,மேட்டுப்பாளையம்,ஆதிநாராயணபுரம், தீர்த்தனகிரி, கொத்தவாச்சேரி, பின்னலூர், வடக்குமாங்குடி உள்பட 28 இடங்களில் மீண்டும் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. குறிப்பாக 5 கிலோ மீட்டருக்கு ஒரு இடத்தில் இந்த கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கடந்த முறை செயல்பட்ட பெரும்பாலான இடங்களில் உள்ள கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டன. இருப்பினும் விவசாயிகள் தங்கள் நெல்லை அந்தந்த இடங்களில் கொண்டு வந்து வைத்துள்ளனர். அதன்படி கடலூர் அருகே பூண்டியாங்குப்பம் நெல் கொள்முதல் நிலையத்திலும் விவசாயிகள் 100 மூட்டைகளுக்கு மேல் நெல்லை வைத்து கொள்முதல் செய்வதற்காக காத்திருந்து வருகின்றனர். ஆனால் கடந்த 28 ந்தேதி அந்த கொள்முதல் நிலையத்தில் பணியில் இருந்த பட்டியல் எழுத்தர் விவசாயியிடம் லஞ்சம் வாங்கியபோது லஞ்ச ஒழிப்பு துறை போலீசாரால் கைது செய்யப்பட்டார். அதன்பிறகு அந்த கொள்முதல் நிலையம் செயல்படவில்லை. இதனால் ஏற்கனவே விவசாயிகள் கொண்டு வந்த நெல் மூட்டைகள் அனைத்தும் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையில் நனைந்து நெல் முளைத்து நாற்றாகி வருகிறது. கொட்டி வைத்த நெல்லும் தார் பாய் போட்டு மூடினாலும் முளைத்து வீணாகி வருகிறது. இதை பார்த்து விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். இது பற்றி விவசாயிகள் கூறும் போது, எங்கள் பகுதியில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்காததால் விவசாயிகள் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறோம். ஏற்கனவே பிடித்தம் செய்த நெல், கொள்முதல் செய்வதற்காக கொண்டு வந்த நெல் அனைத்தும் முளைத்து வீணாகி வருகிறது. ஆகவே இதை மாவட்ட நிர்வாகம் கவனித்து எங்கள் பகுதியில் மீண்டும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு